**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(30.07.2022 முதல் 03.08.2022 )**

**அறிக்கை எண் 060/2022** **தேதி.29.072022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (26.07.2022 முதல் 28.07.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 03.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26/07 | 27/07 | 28/07 | தேதி | நாள் -1 30/07 | நாள்-2 31/07 | நாள்-3 01/08 | நாள்-4 02/08 | நாள்-5 03/08 |
| 1.0 | 3.8 | 9.4 | மழை (மி.மீ) | 10 | 18 | 12 | 20 | 35 |
| 33 | 31 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 33 | 33 | 32 |
| 24 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 23 | 23 |
| 7 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 7 | 7 | 7 |
| 88 | 88 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 80 | 80 | 85 |
| 91 | 62 | 50 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 65 | 70 |
| 8 | 8 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 12 | 12 | 12 | 6 |
| 90 | 250 | 90 | காற்றுவீசும் திசை | 270 | 270 | 270 | 270 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (30.07.2022 முதல் 03.08.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது.அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம்

**85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.**

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 30-07-2022 | 54 | 44 | 48 | 46 | 48 | 47 | 37 | 53 | 53 | 55 | 48 | 53 | 35 |
| 31-07-2022 | 48 | 36 | 41 | 37 | 40 | 39 | 28 | 47 | 46 | 50 | 41 | 46 | 26 |
| 01-08-2022 | 59 | 49 | 54 | 53 | 54 | 52 | 43 | 59 | 58 | 60 | 53 | 58 | 44 |
| 02-08-2022 | 52 | 43 | 50 | 42 | 47 | 49 | 35 | 52 | 51 | 53 | 51 | 50 | 31 |
| 03-08-2022 | 205 | 165 | 208 | 158 | 184 | 198 | 123 | 209 | 201 | 207 | 212 | 194 | 110 |

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை எதிர் பார்க்கப்படுபிறது.<br>தொடர்ந்து மழை பெய்து வருவதால் அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.<br>மேற்கு தொடர்ச்சி மழையடிவாரங்களில் அதிக மழைக்கு வாய்ப்புள்ளதால் சரிவுக்கு குறுக்காக வடிகால் வசதி ஏற்படுத்தி மண்அரிப்பினை தடுக்கவேண்டும். |
| மக்காச்சோளம் | வளர்பருவம் | நடவு செய்து 30 நாட்களான இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 55கிலோ யூரியா மற்றும் 12கிலோ பொட்டாஷை களை எடுத்த பின்பு மேலுரமாக இடவும்.<br>பெறப்பட்ட மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இறவையில் மக்காச்சோள விதைப்பைத் தொடரவும். |
| கரும்பு | வளர்பருவம் | கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பின்பருவ கரும்பிற்கு மேலுரமாக 90 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்த தழைச்சத்து மற்றும் 37 கிலோ சாம்பல் சத்து உரங்களை இட வேண்டும். |
| தக்காளி | நாற்றாங்கால் | நடவு செய்யப்படும் தக்காளியில் மண்ணிலிருந்து பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு 2.5 கிலோ ட்ரைக்கோடெர்மா விரிடி உயிர் பூஞ்சாணக்கொல்லியினை 50 கிலோ |

| | | |
|---|---|---|
| | | தொழுஉரத்துடன் கலந்து இடவேண்டும். |
| கறிவேப்பிலை | | நிலவும் வானிலையால் கறிவேப்பிலையில் இலைப்புள்ளி நோய் தென்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் கார்பன்டசிம் கலந்து தெளிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும்.<br>நிலவும் வானிலையினால் வாழையில் சிகாடாகா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளதால் கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பென்டாசிம் 1 கிராம் (அ) மேங்கோசெப் 2 கிராம் (அ) காப்பர் ஆக்சி குளோரைட் 2 கிராம் (அ) குளோரோத்தலனில் 2.5 கிராம் தெளிக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும்.<br>தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடி வீக்க நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கரக்கும் முன்னும் பின்னும் மடியை 1 சதம் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கலவையில் நன்கு கழுவ வேண்டும்.<br>பருவமழை ஆரம்பித்துவிட்டதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி மற்றும் நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசி போடவேண்டும். மேலும் குடற்புழு நீக்கம் செய்யவேண்டும்.<br>மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழி கூடாரங்களை சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிட்டு காற்றின் வேகத்தை குறைக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

- நிலவும் வானிலையால் நிலக்கடலையில் செர்கொஸ்போரா இலைப்புள்ளி நோய் தாக்கி இருந்தால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் மேங்கோசெப் பூஞ்சாணக்கொல்லியை கலந்து தெளிக்க வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**